# பிரசங்கிக்கப் பட்டவைகளிலேயே மாபெரும் பிரசங்கம் ஒன்று (17:22-34)

*கேட்கப்பட வேண்டிய மிகவும் முக்கியமான கேள்விகளில், பின்வரும் கேள்விகளும் அடங்குகின்றன: "நான் எங்கிருந்து வந்தேன்?"; "நான் ஏன் இங்கு இருக்கின்றேன்?"; "நான் எங்கு செல்கின்றேன்?"; "இம்மூன்றில், முதலாவது கேள்விக்குப் பதில் கூற அறிவியல் முயற்சி செய்கின்றது, தத்துவமானது இரண்டாவது கேள்வியுடன் மல்யுத்தம் செய்து கொண்டிருக் கின்றது; கிறிஸ்தவ விசுவாசம் மட்டுமே இம்மூன்று கேள்வி களுக்கும் திருப்திகரமான பதிலை உடையதாயிருக்கின்றது" (வாரன் W. வயர்ஸ்ப், வியாக்கியானத்திலிருந்து).*

*மனிதனின் சிக்கலான கேள்விகளுக்கான பரலோகத்தின் பதில்கள் அப். 17ல் பவுலின் மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பிரசங்கமானது பத்து வசனங் களிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது, இது இரண்டு நிமிடத்திற்கும் சற்றுக் குறைவான நேரத்தில் வாசித்து முடிக்கப் படக் கூடும்; ஆனால் அழிவுக்குரிய மனிதரால் பிரசங்கிக்கப் பட்டவைகளிலேயே மாபெரும் பிரசங்கங்களில் ஒன்றாக இது உள்ளது.*

*இந்தப் பிரசங்கத்தின் சூழ்நிலைகள் பற்றி நாம் ஏற்கனவே ஆய்வு செய்துள்ளோம். இப்பொழுது நாம், இந்தத் தலைசிறந்த படைப்பைப் பற்றி விரிவாகப் பரிசோதிப்போம்.*

# பிரசங்கம் (17:22-31)

Areopagus (மார்ஸ் மேடை) யில் இரண்டு வெள்ளைக் கற்கள் இருந்தன. விசாரணையின்போது வாதி ஒரு கல்லின் மீதும் பிரதிவாதி இன்னொரு கல்லின் மீதும் நிற்பார்கள். ஒலியானது மேல் நோக்கிச் செல்லும் வகையில் இருந்ததால், இந்தக் கற்கள் மேடையின் கீழ்முனையில் இருந்தன. பவுல், இவ்விரு கற்களின் ஒன்றின் மேலேயோ அல்லது அருகிலேயோ நின்று கொண்டு, அத்தேனே பட்டணத்தின் அறிவுஜீவிகளுடன் பேச முற்பட்டதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது.

எவ்விதத்தில் அவர் தொடங்கிச் செல்ல வேண்டியதாயிருந்தது? அந்தியோகியா(பிசீதியா)விலிருந்த ஜெப ஆலயத்தில் அவர் பிரசங்கித்தது போல, இஸ்ரவேல் நாட்டோடு தேவனுடைய செயல்பாடுகள் பற்றிய ஒரு ஆய்வுடன் அவர் தொடங்க முடியாதிருந்தது (13:17). தெசலோனிக்கேயில் இருந்த ஜெப ஆலயத்தில் அவர் வேதவாக்கியங்களின் நியாயங்களைச் சம்பாஷணை செய்தது போலக்கூட இங்கு செய்ய முடியாதிருந்தது (17:2), ஏனென்றால் இவ்விடத்தில் அவரது உரையைக் கேட்டவர்கள் தேவனுடைய வசனத்தை அறியாதவர்களாய் இருந்தார்கள். மக்களின் நிலை எதுவோ அதில் இருந்துதான் நாம் தொடங்க வேண்டும். கிணற்றின் அருகே ஒரு பெண்ணைச் சந்தித்தபோது கிறிஸ்து அவளிடத்தில் தண்ணீரைப் பற்றி-ஜீவதண்ணீரைப் பற்றி - பேசினார் (யோவா. 4:10). சத்தியத்தைத் தேடுகிறவர்கள் என்று தங்களைத் தாங்களே அறிவித்துக் கொண்டவர்களைப் பவுல் எதிர் கொண்ட போது, அவர் சத்தியத்தை - தேவன் மற்றும் மனிதன் பற்றிய சத்தியத்தைப் பற்றி - பேசினார்.

"அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவில் நின்று: 'அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன்' " (வ. 22). "மிகுந்த தேவதாபக்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "அசுத்த ஆவிக்குப் பயப்படுகின்றவர்கள்" (அதாவது அசுத்த ஆவிகளைப் பயபக்தியுடன் வழிபடுகின்றவர்கள்) என்று அர்த்தப்படும் ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. "அசுத்த ஆவி'' என்ற வார்த்தை நமக்கு உணர்த்துவது போன்ற

மோசமான ஒரு அர்த்தத்தை அன்று பவுலின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு உணர்த்தவில்லை; கிரேக்கர்கள் அசுத்த ஆவிகளை வணங்கினார்கள். (17:18க்கான விளக்கங்களைக் காணவும்.) இந்த அசுத்த ஆவிகளுக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்த விக்கிரகங்களால் அந்தப் பட்டணம் நிறைந்திருந்ததால், அவர்கள் அநேகமாக இந்தக் கூற்றை ஒரு பாராட்டுரையாகவோ[1] அல்லது விமர்சனமாகவோ எடுத்துக் கொள்ளாமல் ஒரு உண்மையான கூற்றாக மட்டுமே எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

பவுல் தாம் கூறியதை விளக்கப்படுத்தினார்: ‘‘எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து, உங்கள் ஆராதனைக் குரியவைகளைக் கவனித்துப் பார்த்த பொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்’’ (வ. 23அ). உலக வரலாற்றாளர்கள் தங்கள் பதிவுகளில், அறியப்படாத தேவதைகளுக்கென்று பலிபீடங்கள் அப்பகுதியில் இருந்தது ஒரு பொதுவான வழக்கமாகும்[2] என்று எழுதி வைத்திருக்கின்றார்கள். நான் (அத்தேனேயில் இருந்த ஏஜியன் கடலுக்குக் குறுக்கேயுள்ள) பெர்கமு பட்டணத்திற்குச் சென்ற பொழுது, டெமேட்டெர் என்ற கடவுளுக்கு எழுதப்பட்டிருந்த ஆலயத்தின் சிதிலங்களையும், அங்கு புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருந்த ‘‘அறியப்படாத தேவனுக்கு’’ அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பலிபீடத்தையும் நான் பார்த்தேன்.

இந்த ஆலயங்களின் தொடக்கம் பற்றிய யூகங்கள் கணிசமான அளவு இருக்கின்றன. சிலவற்றின் விஷயங்களில், ஒரு பலிபீடம் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டு, பின்னாளில் பழுது நீக்கப்படும்போது, மூலக் கல்வெட்டுப் பதிவு எதுவும் இல்லாமல் போயிருந்தால், ஒருவேளை அதற்கு ‘‘அறியப்படாத தேவன் அல்லது தேவர்களுக்கு’’ என்று பொதுவான பெயர் கொடுக்கப்படலாம்.

அநேக வருடங்களுக்கு முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியொன்றின் புகழ்பெற்ற விளக்கம் ஒன்று இவ்விடத்தில் ஏற்புடையதாக இருக்கும். நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்று போட்ட கொடிய வியாதியொன்று தேசம் முழுவதையும் நாசப்படுத்தியது. தேவர்கள் சந்தோஷமா

யில்லை என்று நினைத்து மக்கள் தங்களின் ஆயிரக்கணக்கான தேவதைகளுக்குப் பலி செலுத்தினார்கள், ஆனால் பயன் ஒன்றும் விளையவில்லை. எப்பிமெனிடஸ் என்ற பெயர் கொண்ட முதிர்ந்த வயது மனிதரிடத்தில் யோசனை கேட்கப் பட்டது. அவர், "நீங்கள் அறியாத ஒரு கடவுள் உங்கள் மேல் கோபமாயிருக்க வேண்டும்" என்று கூறி, பின்வரும் செயலைச் செய்யும்படி ஆலோசனை கொடுத்தார்: பல வண்ணம் கொண்ட ஆட்டுமந்தையொன்றை Aeropagus என்று அறியப் பட்ட பரிசுத்த இடத்தின் பூமியின் மேல் கண்காணும்படி கட்டவிழ்த்து விட்டு, அந்த அறியப்படாத கடவுள் தாம் பலியாக ஏற்க விரும்பும் ஆட்டை மண்டியிடப் பண்ண வேண்டும் என்று வேண்டி கொள்ள வேண்டும். மக்கள் இந்த ஆலோசனையைப் பின்பற்றி, ஆடுகள் எங்கெல்லாம் மண்டி யிட்டனவோ அங்கெல்லாம் ஒரு பலிபீடத்தை ஏற்படுத்தி, அவ்விடத்தில் மண்டியிட்ட ஆட்டை அந்தப் பலிபீடத்தில் பலியிட்டார்கள். "அறியப்படாத தேவனுக்கு" என்பதாக இவ்வாறு எழுப்பப்பட்ட பலிபீடங்களில் ஒன்றாவது பவுலின் நாட்களில் இருந்திருக்க வேண்டும்.

இந்தப் பீடத்திற்கான மிக எளிய விளக்கம் பின்வருமாறு: மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட விக்கிராகாரதனைக்காரர் யாராவது, தாம் அறியாமல் இருந்து, வணங்காது விட்டிருக்கக் கூடிய, ஒரு கடவுளைக் குறித்துப் பயந்து, தாம் அறியாத அந்தக் கடவுளுக்கு ஒரு பலிபீடத்தை எழுப்பியிருக்கலாம். அந்த ஆலயத்திற்கான காரணம் எதுவாக இருந்தாலும், அது பவுலின் நோக்கத்திற்கு முழுமையாகப் பொருந்தியது. அவர் "அந்நிய தேவதைகளை" அறிமுகப்படுத்துவதாகக் குற்றம் சாட்டப் பட்டிருந்தார் (வ. 18); அவரோ, இருக்கிறார் என்று அத்தேனியர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டும், அவர்களால் அறியப்படாமலும் உள்ள தேவனையே தாம் பிரசங்கித்ததாக அவர்களுக்குக் காண்பிக்கவிருந்தார். எனவே அந்த அப்போஸ்தலர், "நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" (வ. 23ஆ) என்று கூறினார்.

"அறியாமல்" என்று வசனம் 23ல் உள்ள வார்த்தையானது அவமானப்படுத்துவது போல ஒலிக்கின்றது. நம்மில் அநேகர் "அறியாதவர்கள்" என்று அழைக்கப்படுவதைக் காட்டிலும்

"அழகில்லாதவர்கள்" என்று அழைக்கப்படுவதை அதிகம் சகிப்பவர்களாய் இருக்கின்றோம். ஆயினும் பவுல் "அறியப் படாத தேவனுக்கு" என்று அவர்கள் பயன்படுத்திய அதே சொல்லையே பயன்படுத்தினார். வசனம் 30ல் இதே வார்த்தை மறுபடியும் பயன்படுத்தப்படும். "அறியப்படாத" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை *agnosto*[3] என்பதாகும், இவ்வார்த்தை *a* (எதிர்முன்னி) என்ற வார்த்தை யுடன் *gnosis* ("அறிவு" என்பதற்கான வார்த்தை) என்ற வார்த்தையை இணைத்துப் பெற்ற ஒரு கூட்டு வார்த்தை யாகும். அது அறிவின்மையைச் சுட்டிக் காட்டுகிறது (அறியாமை). பவுல் அவ்விடத்தில், "நீங்கள் என்னைக் கவனியுங்கள், அப்போது நீங்கள் அறியாமலிருப்பதாக எண்ணுகின்ற தேவனை அறிந்து கொள்வீர்கள்" என்று கூறினார்.

## தேவன் என்ன செய்திருக்கின்றார்

தேவனைப் பற்றிய மிகச் சரியான கருத்தைப் பெற்றிராத மக்களிடத்தில் பவுல் பேசும் பொழுது, அவர் இயேசுவைப் பற்றித் தொடக்கத்தில் கூறாமல், தேவனைப் பற்றியே கூறினார் என்பதைக் கவனியுங்கள். உலகத்தில் இருக்கும் தவறான மதங்கள் எல்லாம், தேவனைப் பற்றிய தவறானதொரு கண்ணோட்டத்திலேயே அமைந்திருக்கின்றன. இதை நினைவில் வையுங்கள்: மக்கள் எங்கு இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்ற நிலையில் இருந்தல்ல, மக்கள் இருக்கின்ற நிலையில் இருந்தே நீங்கள் உங்கள் செய்தியைத் தொடங்க வேண்டும்.

(1) தேவன் எல்லாவற்றையும் படைத்தார்.

தேவன் இருக்கின்றார் என்பதற்கான தத்துவ ரீதியான நிரூபணங்களுடன் பவுல் தொடங்கவில்லை. அத்தேனே பட்டணத்தாரைப் போலவே அநேக மக்கள் "கடவுள்" என்று அழைக்கப்படுபவர் ஒருவர் இருக்கின்றார் என்று நம்புகின் றார்கள். மாறாகப் பவுலின் பிரசங்கமானது "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின" (வ. 24அ) தேவனைப் பற்றிக் குறிப்பிடுவதன் மூலம் பழைய ஏற்பாடு தொடங்கின இடத்தில் (ஆதி. 1:1) தொடங்கியது. (14:15-17க்கான

*குறிப்புகளை காணவும்.)*

*பவுலின் வார்த்தைகள்,* Grand Canyon *என்ற கணவாய், கார்ஸ்பாட் குகையின் தோற்றம், ஸ்விஸ் நாட்டின் கம்பீரமான ஆல்ப்ஸ் மலை, ஆஸ்திரேலியாவில் உள்ள ஆச்சரியப்படத் தக்க* Ayers *பாறை, ஸ்காட்லாந்தின் வெளிர்ப்பச்சைப் புல்வெளிகள், ஹவாய்த் தீவின் கடற்கரையில் திகைக்க வைக்கும் சூரிய அஸ்தமனம், எந்த ஒரு கண்டத்திலும் நட்சத்திரங்களால் ஒளியூட்டப் பெற்ற இரவின் மகிமை ஆகியவற்றை மனதிற்குக் கொண்டு வருகின்றது. ‘‘தேவன் இவை யாவற்றையும் உண்டாக்கினார்’’ என்று உணரும்போது நான் ஆச்சரியத்தால் நிறைகின்றேன்!*

*அவர்கள் தேவனை உண்டாக்கியிருந்தார்கள் என்று பவுல் கூறாமல், தேவன் அவர்களை உண்டாக்கியிருந்தார் என்று பவுல் கூறினார்; அவர்கள் தேவனுக்கு ஒரு வீட்டை உருவாக்க வில்லை, ஆனால் அவர்தாம் அவர்களுக்கு ஒரு வீட்டை - இந்த பூமியை உருவாக்கினார். அவருடைய வார்த்தைகளானவை, அணுக்களின் மோதலினால் தற்செயலாக இவ்வுலகம் உண்டா யிற்று என்ற எப்பிக்கூரரின் பொருளாதாயக் கொள்கையை மறுத்தன.*

*வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றிய எந்தப் புரிந்து கொள்ளுதலுமே, படைத்தவரை ஏற்றுக் கொண்டு, அவரைப் பற்றிய ஒரு புரிந்து கொள்ளுதலோடுதான் தொடங்க வேண்டும், அதுவே சரியானதாக இருக்கும். இவ்விதமாக, விசேஷித்த படைப்பு என்ற கருத்துக்கு எதிராகச் சாத்தான் தொடர்ந்து வலிய தாக்குதல்களைக் குவித்துக் கொண்டுள் ளான்-தற்செயலாக இவ்வுலகிற்கு நாம் வந்தோம் என்ற சாத்தானுடைய பொய்யை நாம் வைராக்கியத்துடன் எதிர்த்து நிற்க வேண்டும்!*

*எல்லாவற்றையும் உண்டாக்கிய தேவனைப் பற்றித் தொடர்ந்து பவுல் வெளிப்படுத்தினார்: “... அவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப் பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை*[4] *... தமக்கு யாதொன்று தேவையானது போல மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை” (வ. 24ஆ, 25ஆ). உலகத்தில் காணப்பட்டிருக்கிறவைகளில் மாபெரும் வரிசையில் அமைந்த*

ஏராளமான விக்கிரகக் கோவில்களினால் பவுல் சூழப்பட்டிருந்தார். கட்டப்பட்டவைகளிலேயே மாபெரும் கோவிலான ஜீயஸ்ஸின் கோவில் சற்றுத் தொலைவில் இருந்தது. கீழே விக்கிரகங்களும் கோவில்களும் நிறைந்த அகோரா இருந்தது. மேலே, ஒப்பிட முடியாத பார்த்தினனுடைய கோவில் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட கோவில்கள் இருந்தன. இருப்பினும், கோவில்கள் எவ்வளவு அழகியவைகளாய் இருந்தாலும் தேவனுக்கு அவைகள் தேவையில்லை. அந்தக் கோவில்களில் இருந்த உயிரற்ற, உதவியற்ற விக்கிரகங்களைப் போல தேவனுக்கு அத்தேனியர்களின் உதவி (பணிவிடை) தேவைப் படுவதில்லை; மாறாக, அவர்களுக்குத்தான் அவருடைய உதவி தேவைப்பட்டது!

(2) தேவன் எல்லா மனிதர்களையும் உண்டாக்கினார்.

பவுல் பொதுவான கருத்தில் இருந்து குறிப்பான கருத்துக் குக் கடந்து சென்றார். தேவன் எல்லாவற்றையும் உண்டாக் கினார் என்பதால், அவர் நம்மைப் படைத்தார் என்பதும் அர்த்தமாகின்றது: "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் ..." (வ. 25அ). அவர் தொடக்கத்தில் நமக்கு ஜீவனைக் கொடுத்து, அந்த ஜீவனை நாம் தொடருவதற்காக நமக்கு சுவாசத்தைக் கொடுக்கின்றார்; மற்றும் அவர், ஜீவனை (வாழ்க்கையை) நிலைநிறுத்தத் தேவையான "சகலத்தையும்" நமக்குக் கொடுக்கின்றார். தேவன் உங்களுக்கு எவ்வளவாய்த் தேவை? ஆழ்ந்து ஒருமுறை சுவாசியுங்கள். தேவனே இவ்வித ஆழ்ந்த சுவாசம் பெற உங்களுக்கு உதவுகின்றார் - இது இல்லையென்றால் நீங்கள் இறந்து விடுவீர்கள். நீங்கள் உள்ளிழுக்கும் ஒவ்வொரு சுவாசமும் சர்வவல்லவரிடமிருந்து வரும் ஒரு பரிசாகும்!

''மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி'' (வ. 26அ). அநேக மொழிபெயர்ப்புகளில் "ஒரே" என்ற வார்த்தைக்குப் பிறகு ஆதாமைக் குறிப்பிடுவதற்காக "மனிதனாலே" என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது. (ஆதி. 3:20ஐக் கவனிக்கவும். இது ஏவாளை குறிப்பிட்டாலும் கருத்து அதேதான்.) தேவன் நம்மெல்லாரையும் உண்டாக்கியிருப்பதால், நம் எல்லாருக்கும் பொதுவான பிதா ஒருவர் இருக்கின்றார், நாம் எல்லாரும்

சகோதர சகோதரிகளாய் இருக்கின்றோம்! மீண்டும் ஒருமுறை காட்சிகள் என் மனத்திரையில் பெருக்கெடுத்து ஓடுகின்றன: துருக்கியப் பள்ளிக்குழந்தைகள் ஒரு புகைப்படத்திற்குக் காட்சி கொடுக்கின்றார்கள், அத்தேனிய இளைஞர்கள் தங்கள் ஜீன்ஸ் கால்சட்டைகளுடன் வரிசையில் நிற்கின்றார்கள், ஒரு முதியவர் தமது முகத்தில் வரிகளுடன் நிற்கின்றார், அமெரிக்காவின் ஆதிக் குடியொருவர் பாரம்பரிய நடனமாடுகின்றார், ஆஸ்திரே லியாவில் ஒரு அயலகத்தார் உதவி செய்ய மிகவும் ஆவல் உள்ளவராய் இருக்கின்றார், ஜிப்ஸி கூட்டம் ஒன்று வண்ணம் மிகுந்த ஆடைகளுடன் இருக்கின்றது, சின்னஞ்சிறு ஆந்னி கிறிஸ்டைன் வில்க்கின்ஸன் தனது தாயின் கைகளுக்குள் அடங்கியிருக்கின்றாள். இவர்களில் சிலர் என்னைப் போன்றவர்கள், மற்றவர்கள் என்னைப் போல் இல்லை; ஆனால் அனைவருமே தேவனுடைய கைவேலைப்பாடாகவே இருக்கின்றோம்!

பவுல் தமது முந்திய குறிப்பில் தேவனைப் பற்றிய கிரேக்கர்களின் கண்ணோட்டத்தைத் தாக்கினாரானால், இங்கு அவர், மனிதனைப் பற்றி கிரேக்கர்களின் கண்ணோட்டத்தைத் தாக்கினார். கிரேக்கர்கள் தங்களைத் தனிச் சிறப்புள்ளவர் களாக, மற்ற எல்லா மனிதர்களிலும் இருந்து மாறுபட்ட தொடக்கமும், நிலையும் உள்ளவர்கள் என்று எண்ணினார்கள். அவர்கள் மனிதர்களை, "கிரேக்கர்கள் மற்றும் காட்டு மிராண்டி கள்'' என்று இரண்டு வகையாகப் பிரித்தார்கள். தேவன் "மனுஷஜாதியான சகல (கிரேக்கர் உட்பட!) ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து" என்று சொல்லக் கேட்டது அவர்களின் தேசியப் பெருமைக்கு ஒரு அடியாக இருந்தது.

இவ்வித தாழ்ந்த எண்ணம் கொண்டிருந்தவர்கள் கிரேக்கர்கள் மாத்திரம் அல்ல. அநேக மனித இனக்குழுக்கள், மனிதகுலம் முழுவதும் ''நாம்'' மற்றும் ''அவர்கள்'' என்ற குழுக்களால் ஆனதென்று நினைக்கின்றார்கள். ''யூதர்கள் மற்றும் புறஜாதியார்'' என்பது யூதர்களின் பிரிக்கும் வகை யாகவும், ''குடிமக்கள் மற்றும் குடிமக்கள் அல்லாதவர்கள்'' என்பது ரோமர்களின் வகைப்படுத்துதலாகவும் இருந்தது. மனிதர்களுக்கிடையே இருந்த இவ்விதத் தடைகள்

எல்லாவற்றையும் இயேசு தகர்த்து விட்டார் (எபே. 2:14) என்பதை அறியாதவர்கள் இவ்வித தப்பெண்ணத்தால் இன்றும் தொடர்ந்து குழுக்களாகப் பிரிந்து கிடப்பது துரதிருஷ்டவச மானதாகும். நாம் யாவரும் "கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்க வேண்டும்" (கலா. 3:26-28) என்பதே அவருடைய சித்தமாகும். உண்மையில் கவனத்திற்குரியதாக இருப்பது "கிறிஸ்துவுக்குள்" மற்றும் "கிறிஸ்துவுக்குப் புறம்பே" என்ற வகைப்படுத்துதல்கள் மட்டுமே.

(3) தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்றார்.

தேவன், "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து" என்பதை உறுதிப்படுத்தியபின் பவுல், "முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப் பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" (வ. 26) என்பதையும் கூடுதலாகக் கூறினார்.[5] இவ்வசனத்திற்கு, தானியேல் 2:21 ஒரு நல்ல விளக்கவுரையாகும்: "அவர் காலங்களையும் சமயங்களை யும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ..." வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவன் கட்டுப்படுத்துகின்றார். நியமிக்கப்பட்ட பருவகாலங் களை அவர் தீர்மானம் செய்ததுடன் (14:17) அரசர்களின் ஆட்சிக்கால அளவையும் அவர் தீர்மானித்துள்ளார். சமுத்திரங் கள் முதலிய புவியியல் எல்லைகளை அவர் நிலைநாட்டிய துடன், அரசியல் எல்லைகளையும் நிலைநாட்டியுள்ளார். தேவன் இவ்வுலகத்தை உண்டாக்கிய பிறகு, இதை விட்டு விட்டு அவர் புறம்பே சென்று விடவில்லை; மனிதர்களின் நலன்களில் அவர் அன்றும் இன்றும் செயல்படுபவராகவே இருக்கின்றார். அத்தேனே பட்டணத்தார் இதைப் பற்றி அறியாதிருந்தாலும், (அவர்களால்) அறியப்படாத இந்த தேவனே, அவர்களுக்கு வரலாற்றில் மதிப்புக்குரிய இடம் கொடுத்தார்![6]

## மனிதன் என்ன செய்ய வேண்டும்

தேவன் செய்திருந்தது என்ன என்பதை வெளிப்படுத்திய பவுல், இப்பொழுது மனிதன் என்ன செய்ய வேண்டும் என்பதற்குத் திரும்பினார்.

*(1) மனிதன் தேவனைத் தேட வேண்டும் (எபி. 11:6; மத். 7:7, 8; உபா. 4:29).*

*வசனம் 27ல், "தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்" என்றுள்ளது. "அப்படி" என்ற வார்த்தையானது அப்பொழுது முன் வைக்கப்பட்ட சத்தியங்களுடன் இந்த வசனத்தை இணைக்கின்றது. (மூல வசனத்தில் "தேடும்படிக்கு" என்று தொடங்குகின்றது.) நாம் தேவனைத் தேடும்படி நம்மை உற்சாகப்படுத்துவதற்காகவே தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கி, எல்லாவற்றையும் கட்டுப்படுத்திக் கொண்டிருக் கின்றார் (NIV). "மனிதர் தம்மை தேட வேண்டும் என்பதற்காக தேவன் இப்படிச் செய்தார்" என்றுள்ளது. பதவிகள், உடைமைகள் மற்றும் இன்பங்கள் ஆகியவற்றைத் தேடுவதற் காக நாம் இந்த உலகத்தில் வைக்கப்படவில்லை; தேவனைத் தேடுவதற்காகவே நாம் இந்த உலகத்தில் வைக்கப்பட்டிருக் கிறோம்![7] தேவனுக்கு நமது பணிவிடை தேவையில்லை (வ. 25), ஆனால் அவர் நமது ஐக்கியத்தை விரும்புகின்றார்!*

*பவுலின் அடுத்த வார்த்தைகள் அத்தேனியத் தத்துவ ஞானிகள் பற்றிய ஒரு மூடலான விளக்கம் இல்லை என்று சொன்னால் என்னால் வியப்படையாமல் இருக்க முடியாது: "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டு பிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவர் அல்லவே" (வ. 27). அந்தத் தத்துவ ஞானிகள் சத்தியத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள், ஆனாலும் - மனிதரின் தர்க்கங்களை மட்டுமே பயன்படுத்திக் கொண்டு - அவர்கள் இருளிலே தடவிக் கொண்டிருந்தார்கள். இதற்கு இணை ஒன்று என் மனதில் நினைவுக்கு வருகின்றது: விருந்து ஒன்றில் கண்கள் கட்டப்பட்ட குழந்தைகள் "கழுதை யின் படத்தில் அதன் வாலைப் பொருத்துவதற்கு" அறை முழுவதிலும் தடுமாறியபடி முயற்சி செய்கின்றார்கள். கண்கள் கட்டப்படாத நிலையில் அது மிகவும் சுலபமாயிருக்கும்; கண்கள் கட்டப்பட்ட நிலையிலோ அது ஏறக்குறைய முடியாத ஒரு விஷயமாகவே உள்ளது. அந்தத் தத்துவ ஞானிகள் தங்களின் பெருமைகளை விழுங்கி, அறியப்படாத தேவன் தம்மை வெளிப்படுத்தியிருந்தார் என்பதை ஒப்புக் கொள்வார் களேயானால், தாங்களாகவே முன் வைத்துக் கொண்ட*

தங்களின் கண் கட்டுகளை அவர்கள் அவிழ்த்து விட்டுக் கொண்டு, "அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவர் அல்ல" என்பதை அவர்கள் காண முடியும்.

தேவன் எவ்வளவு நெருக்கமாயிருக்கின்றார்? "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (வ. 28). ஸ்தோயிக்கர்களின் பொருளாதாய இறைவழிபாட்டுக் கொள்கையைப் போன்றதேயான இன்னொரு இயற்கை வழிபாட்டுக் கருத்தைப் பவுல் விளக்கினார் என்று சிலர் அவர் மேல் குற்றம் சாட்டுகின்றார்கள். ஆயினும் ஸ்தோயிக்கர்களின் கருத்தான நபர்த்துவமற்ற சக்தி ஒன்று இயற்கையில் வியாபித்துள்ளது என்பது, வேதாகமத்தின் கருத்தான நபர்த்துவ முள்ள, எங்கும் நிறைந்துள்ள தேவனே வானத்தையும் பூமியையும் நிரப்பி, நாம் உட்பட "சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய் [நிலை நிறுத்துகிறவராய்; NIV]" (எபி. 1:3) இருக்கின்றார் என்ற கருத்துக்கு மிகவும் தொலைவில் இருக்கின்றது! பவுலின் அடுத்த வார்த்தைகள்-"நாம் அவருடைய சந்ததியார்"-இயற்கைக் கடவுள் கோட்பாடு கொண்ட ஸ்தோயிக்கர் என்ற கிரேக்க தத்துவ ஞானிகளின் கருத்துக்களுக்கு எதிர்ப்பானதாக இருந்தது.

அங்கிருந்து கேட்டவர்களில் அநேகர் தேவன் அருகில் இருக்கின்றார் என்ற கருத்தைப் பெற்றுக் கொள்வதை, கடினமானதாகக் கண்டார்கள் என்பதை அறிந்த பவுல் தமது கூற்றுடன் ஒத்துப்போன அவர்களின் சொந்த எழுத்தாளர் களின் கருத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்: "அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்" (வ. 28ஆ). இரு கவிஞர்களில் இருந்து பவுல் மேற்கோள் காட்டினார். அவருடைய முந்திய கருத் தானது அநேக ஆண்டுகளுக்கு முன்பு (கி.மு. 600; தீத்து 1:12ல் உள்ள மேற்கோளும் கூட எப்பிமெனிடெஸ்ஸால் தரப்பட்டது என்ற பொதுக் கருத்துள்ளது. கிரேக்கத் தத்துவ ஞானிகள் எப்பிமெனிடெஸ்ஸை உயர்வாக மதித்தனர்; சில கிரேக்கர்கள் அவரை ஏவப்பட்டவர் என்று கூட நினைத்தார்கள்) எப்பிமெனிடெஸ் என்ற கவிஞர் எழுதிய கவிதை ஒன்றிலிருந்து வந்ததாகும்: "உமக்குள்தான் யாம் உயிர் வாழ்கிறோம்,

*அசைகிறோம் மற்றும் இருக்கிறோம்.'' "நாம் அவருடைய சந்ததியார்" என்ற இரண்டாவது மேற்கோளானது அராத்துஸ்[8] (பிறப்பு கி.மு. 310) என்பவரின் வரியொன்றிலிருந்து குறிப்பிடப் பட்டதாகும்: "மெய்யாகவே நாம் அவரது சந்ததியார்தான்."[9] இந்தக் கவிதைகளில் குறிப்பிடப்பட்ட கடவுள் (அவர்களால் "அறியப்படாதவரான") யேகோவா அல்ல என்பது குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். அது அவர்களின் முக்கிய கடவுளா யிருந்த ஜீயஸையே குறிப்பிட்டது. (14:12க்கான குறிப்புகளைக் காணவும்.) ஜீயஸுடன் யேகோவாவை வைத்து அடையாளப் படுத்த வேண்டும் என்று பவுல் கூறவில்லை. மாறாக, மனித தத்துவங்கள் கூட தனிப்பட்ட ஒரு தேவனை நெருங்கும் கருத்தையே வழி நடத்திச் சென்றுள்ளன, எனவே உண்மை யான தேவனைப் பற்றிய தமது வார்த்தைகள், தர்க்கத்திற் கேற்றவைகள் அல்ல என்று எண்ணப்படக் கூடாது என்பதையே அவர் சுட்டிக் காட்டினார்.*

*(2) மனிதன் சரியான முறையில் ஆராதிக்க வேண்டும்.*

*அறியப்படாத தேவனுடைய இயல்பைப் பற்றிப் பேசிய பவுல், விரைவிலேயே, உண்மையான ஒரே தேவனை ஆராதிப்பது பற்றிப் பேசத் தொடர்ந்தார். தேவனைப் பற்றிய நமது கருத்தின் அடிப்படையிலேயே நாம் எவ்விதம் தேவனை வழிபடுகிறோம் (அல்லது) ஆராதிக்கின்றோம் என்பது அமைகின்றது.*

*ஆராதிக்கும் விஷயம் பற்றிய கருத்தைப் பவுல் ஏற்கனவே பலமுறை தொட்டிருந்தார். தமது பாடத்தின் தொடக்கத்தில் அவர், "அறியாமையினால்" (வ. 23) அவர்கள் அறியப்படாத தேவனை ஆராதித்ததைக் குறிப்பிட்டார். தேவன், "மனுஷர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசம் பண்ணுவ தில்லை; அவர் மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறது மில்லை" (வ. 24, 25) என்று பவுல் வலியுறுத்தியிருந்தார். ஒரே தேவனே எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்று அவர் கூறிய கூற்றுக்கள் (வ. 25, 26), மனிதர்கள் எல்லாரும் ஒரே தேவனை ஆராதிக்க வேண்டும், மற்றும் எல்லாரும் ஒரே விதமான வழியில் அவரை ஆராதிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வழி நடத்தியிருக்க வேண்டும். இப்பொழுது, பவுல் தமது வார்த்தைகளின் மறைமுக அர்த்தத்தை அத்தேனியர்கள்*

*தவற விட்டுவிடாதபடிக்கு, அவர்களின் விக்கிரகாராதனைப் பழக்கங்களின் மையத்தையே ஊடுருவும்படி ஒரு குத்து வாளைச் சொருகினார்: "நாம் தேவனுடைய சந்ததியாரா யிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தி யினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம்[10] ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" (வ. 29). தாழ்ந்தவர்கள் (மனிதன்) எப்படி உயர்ந்தவரை (தேவனை)ப் படைக்க முடியும்? மேலும், பிழைக்கிற, அசைகிற, இருக்கிற நாம் யாவரும் தேவ சாயலில் உண்டாக்கப் பட்டிருந்தால், குளிர்ந்த, உயிரற்ற, ஜடப்பொருள் தேவனா யிருக்க முடியும் என்று நாம் நினைப்பது எப்படி?*

*இது ஒரு தைரியமான, ஒருவேளை விளைவுகளைப் பற்றிய கவலை கூட இல்லாத கூற்றாக இருந்தது. (விக்கிரக ஆராதனையைப் பற்றிய பவுலின் போதனைக்கு பின் நாளில் ஏற்பட்ட ஒரு மறுசெயலை 19:23-28ல் காணவும்.) பட்டணம் முழுவதிலும் - அத்தேனேவில் உருவச் சிலை உட்பட - மாபெரும் அழகுச் சிலைகள் சலவைக் கற்களினால் உருவாக்கப் பட்டு, அவைகளின் மேல் தந்தம் மற்றும் தங்கம் போன்ற விலையேறப் பெற்ற பொருட்களினால் மூடப்பட்டிருக்க, அத்தேனியர்கள் ஒவ்வொருவரும் தங்கம் மற்றும் வெள்ளி யினால் தங்களுக்கென்று தனிப்பட்ட சிறு விக்கிரகங்களைச் செய்து வைத்திருந்தார்கள்.*

*(3) மனிதன் மனந்திரும்ப வேண்டும்.*

*பயமற்ற பவுல் தமது முடிவுரையை வேகமாக நெருங் கினார். அவருடைய வார்த்தைகள் உண்மையானவைகள் என்றால், அத்தேனியர்களின் மூடநம்பிக்கையுள்ள ஆராதனை தவறானதாகும்; அவர்கள், ஒரே ஒரு உண்மையான உயிருள்ள தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால், தங்களையே மாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை: "அறியாமை யுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (வ. 30; "காணதவர்" என்ற வார்த்தை* KJV*-ல்* "Winked at" *என்ற சொற்றொடர் காணப்படுகின்றது, கிரேக்க வார்த்தையானது* "Over" *என்று அர்த்தப்படும் முன்னிடைச் சொல்லும்* "to look"

என்று அர்த்தப்படும் வார்த்தையும் இணைந்த கூட்டு வார்த்தை யாக உள்ளது). ‘‘அறியாமை’’ என்று குறிப்பிடும் கிரேக்க வார்த்தையைப் பவுல் இவ்விடத்தில் மூன்றாவது முறையாகப் பயன்படுத்தினார்: (1) தேவனை “அறியப்படாதவர்” என்று அழைத்ததில், அத்தேனியர்கள் தங்களின் அறியாமையை ஒப்புக் கொண்டிருந்தார்கள் (வ. 23அ). (2) அவரை “அறியா மலே” அவர்கள் ஆராதித்தார்கள் (வ. 23ஆ). (3) இப்பொழுது பவுல், அவர்களுடைய கடந்த கால “அறியாமையை”த் தேவன் சகித்துக் கொண்டார், ஆனால் இனி சகிக்க மாட்டார் என்று கூறினார். தேவன் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; அவர்களின் அறியாமைக்கு இனி அவர்களால் எந்த விதத்திலும் சாக்குப் போக்குச் சொல்ல முடியாது (ரோமர் 1:20ல் காண்க).

“அவர்களின் அறியாமையைத் தேவன் எந்த அளவுக்குக் காணாதவர் போல் இருந்தார்?’’ என்ற கேள்வியில் அநேக விளக்கவுரையாளர்கள் அல்லல் படுகின்றார்கள். தேவனுடைய நினைவை நான் அறிவதில்லையாகையால் (ஏசாயா 55:8, 9), இக்கேள்விக்கு என்னால் பதில் கூற முடியாது. மேலும், தேவன் இனிமேலும் அறியாமையைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார் என்பதைப் பவுல் மறைமுகமாய் உணர்த்தியதால், இக்கேள்விக்கு நான் பதில் தரவேண்டிய அவசியமும் இல்லை; இன்றைய நாட்களில் மனிதர்களுடன் தேவன் எவ்வகையில் கிரியை செய்கின்றார் என்பது பற்றி நாம் கவலைப்பட வேண்டி யது ஒன்றுமில்லை என்றே கூறலாம். ஆகையால் பின்வரும் ஒரே ஒரு எளிய கருத்தை கூறுவதோடு நான் திருப்தியடைகின்றேன்: எனது மகள்கள் சிறுமிகளாயிருந்த போது, நான் அவர்களின் சில நடக்கைகளைக் காணாதது போல விட்டுவிட்டேன்; ஆனால் அதே விதமான நடக்கைகள், அவர்கள் பெரியவர்களானபோது என்னால் காணாது போல விடப்படவில்லை. கடந்த காலத்தில், மனித குலம் குழந்தைப் பருவத்தில் இருந்த போது, தேவன் காணாததுபோல விட்டு விட்ட சில நடக்கைகளை அவர் இப்பொழுதும் காணாது விட்டுவிடுவதில்லை (மத். 19:8, 9 ஐக் கவனிக்கவும்). தேவன் இப்பொழுது மனிதகுலத்தவர் அனைவருக்கும், “நன்மை இது, தவறு இது என்று அறிவதற்குப் போதுமான காலம் இவ்வுலகில் நீங்கள் வாழ்ந்திருக்கின்றீர்கள்; ஆகையால், உங்கள் செயல்களுக்கு நான் உங்களையே

பொறுப்பாளி ஆக்குகின்றேன்!" என்று கூறுகின்றார்.

சுயநீதியை உடையவர்களாயிருந்த சனகெரீன் சங்கத்தார் மனந்திரும்புவது அவசியம் என்று பேதுரு கொடுத்த ஆலோசனையானது (5:31) அவர்களை "மூர்க்கமடையச் செய்திருந்தது", மற்றும் அவர்கள் அவரை கொலை செய்யும்படிக்கு யோசனை செய்தார்கள் (5:33). இப்பொழுது பவுல், சுய திருப்தியுள்ள தத்துவ ஞானிகளிடத்தில், மாபெரும் சிந்தனையுள்ள அவர்கள் மனந்திரும்புவது அவசியம் என்று சுட்டிக் காட்டி, அறிவித்துக் கொண்டிருந்தார்! "மனந்திரும்ப வேண்டும்" என்றால், "பாவத்தைப் பற்றிய ஒருவரது சிந்தனை அல்லது நடக்கையை, பாவத்திற்கான உண்மையான மனஸ்தாபத்தின் விளைவால் மாற்றிக் கொண்டு, தமது வாழ்க்கையை அவர் மாற்றிக் கொள்ளத் தீர்மானித்தல்"[11] என்று அர்த்தமாகின்றது. குறிப்பாக, பவுலின் உரையைக் கேட்டவர்கள் "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, … விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்தில்" (1 தெச. 1:9) மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருந்தது.

பவுலின் நாட்களில் மனந்திரும்புதல் என்பது மாபெரும் தேவைகளில் ஒன்றாக இருந்தது, நமது நாட்களிலும் மனந்திரும்புதல் என்பது மாபெரும் தேவைகளில் ஒன்றாக இருக்கின்றது. Whatever Became of Sin? என்று தலைப்பிடப்பட்ட புத்தகத்தில் கார்ல் மென்னிங்கர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்.

> … தீர்க்கதரிசிகள் மற்றும் யோவான்ஸ்நானன் மற்றும் [கடந்த காலப் பிரசங்கியார்கள்] ஆகியவர்கள் செய்தது போன்று மனந்திரும்புதலுக்கான அழைப்பை மிகத் துணிவுடன் தரும் சமய குருமார்கள் இந்நாட்களில் மிகச் சிலர் தான் இருக்கின்றார்கள். … அக்கினி மற்றும் கந்தகத்தினால் அழிவு ஏற்படும் என்ற அச்சுறுத்தல்களுக்குப் பொதுமக்களிடமிருந்து பழி கூறுதல் (சில தீவிரவாதிகளுக்குப் போல) தங்களுக்குத் திருப்பிவிடப்படுமோ என்று அவர்கள் பயப்படுகின்றார்கள். அவர்கள் குற்றச்சாட்டிற்கு எவ்வளவாய்ப் பயப்படுகின்றார்கள் என்றால், தாங்கள் விசுவாசிப்பது எதுவோ அதைப் பேசும்போது கூட அது தங்கள் முன்பாக (சாய்விருக்கைகளில்) உட்கார்ந்திருப்பவர்களின் காதுகளில் கேட்கப்

பட்டு, அதன்படி அவர்கள் நடந்துவிடாத அளவுக்கு மிகக் குறைவாக, ஒலியற்றுப் பேசுகின்றார்கள்.

*மனுஷரைப் பிரியப்படுத்துகின்றவர்கள் (கலா. 1:10) என்று மென்னிங்கர் அவர்கள் அழைக்கும் ''சமய குருமார்கள்'' மனந்திரும்பும்படி மனிதர்களை அழைக்கத் தயங்கலாம், ஆனால் சுவிசேஷப் பிரசங்கியார்கள் அதைத் தைரியமாகவே செய்கின்றார்கள். இயேசு பிரசங்கிக்க வந்த பொழுது, அவரது வாயில் இருந்து வந்த முதல் வார்த்தையே "மனந்திரும்பி" (மத். 4:17) என்றுதான் இருந்தது.*

*அத்தேனியர்களிடத்தில் பவுல் கடந்த காலத்தைப் பற்றிக் கூறியிருந்தார்: அவர்களது அறியாமையைத் தேவன் காணாத வர் போலிருந்தார். அவர்களின் நிகழ் காலத்தைப் பற்றி அவர் கூறியிருந்தார்: "இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் [தேவன்] கட்டளை யிடுகிறார்." அதன் பிறகு அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக அவர் அவர்களிடத்தில் எதிர்காலத்தைப் பற்றிக் கூறினார்: "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்;[12] அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் (வ. 31அ). அற்றுப் போவதற்காகவே வளர்ச்சி பெறுவதுதான் வாழ்க்கை என்று எப்பிக்கூரர்கள் நினைத் தார்கள், தெய்வீக சக்தியினால் ஈர்க்கப்படும் பாதையே வாழ்க்கை என்று ஸ்தோயிக்கர்கள் நினைத்திருந்தார்கள், ஆனால் பவுலோ, வாழ்க்கை என்பது ''தேவனுடைய நியாயாசனத்தை நோக்கிச் செல்லும் ஒரு பயணம்'' என்று அறிவித்தார் என வில்லியம் பார்க்ளே விளக்குகிறார். அறியப் படாத தேவனே அவர்களை உண்டாக்கியவர் என்று உறுதிப் படுத்தித் தமது பிரசங்கத்தைத் தொடங்கிய பவுல், அறியப் படாத அந்த தேவனே அவர்களின் நீதிபதியாக இருக்கப் போகின்றார் என்று உறுதிப்படுத்தி முடித்தார்!*

*''தேவன் மற்றும் மனிதனைப் பற்றிய சத்தியம்'' என்ற பவுலின் அறிமுகப் பிரசங்கமானது அடிப்படை நிலையில் முடிவு பெற்றது. ஒரு வேதவசனத்தைக் கூட மேற்கோள் காட்டாமல், பவுல் வேதவசனங்களின் விவாதங்களை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்து முன் வைத்தார். இருந்தாலும், அவர்*

"இயேசுவைப் பற்றிய சத்தியம்" என்ற தமது மிக முக்கியமான பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டியதாய் இருந்தது. "... அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் ..." (வ. 31ஆ) என்று அவர் தேவனைப் பற்றி அறிவித்தார். அந்த "மனுஷன்" இயேசுவே. இயேசுவின் உயிர்த்தெழுதல் பல நோக்கங்களுக்குப் பயன்படுகின்றது (ரோமர் 1:5; 1 கொரி. 15:20); நியாயத்தீர்ப்பு நாள் ஒன்று உண்டு என்று இது நிரூபிக்கின்ற தென்பது மிகக் குறைவாய் அறியப்பட்ட ஒரு நோக்கமாகும்! (நாமகரணக் கூட்டத்தார் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுகையில், அவர்களில் எத்தனை பேர் நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பிரசங்கிக்கின்றார்கள் என்பது பற்றி நான் வியப்படைகின்றேன்!) இயேசுவைப் பற்றியும் உயிர்த்தெழுதல் பற்றியும் பிரசங்கித்ததால்தான் பவுல் பெரு மதிப்பு வாய்ந்த அந்தக் கூட்டத்தாரின் முன்பாக அழைக்கப் பட்டிருந்தார் (வ. 18). அவர் முடிக்கையில், முழுவட்டம் சுற்றி, அவ்விரு கருத்துக்களுடனேயே முடித்தார்!

இயேசுவை இரட்சகர் என்று பேசுவதற்குப் பதிலாகப் பவுல் இயேசுவை நியாயதிபதியாகப் பேசியது ஏன்? சுவிசேஷப் பிரசங்கங்களின் பொதுவான வழக்கமாகிய விசுவாசத்திற்குப் பதில் அவர் மனந்திரும்புதலைக் கட்டளையிட்டது ஏன்? பவுலின் காரணங்கள் எதுவாக இருந்தாலும், நாம் மூன்று உண்மைகளைத் தைரியமாய் நம்பலாம்: (1) அந்தக் குறிப்பிட்ட வேளையில், குறிப்பிட்ட இந்த நபர்களுக்குரிய செய்தியைப் பரிசுத்த ஆவியானவரே பவுலினிடத்தில் கொடுத்தார் (மத். 10:19).[13] (2) பவுலின் பிரசங்கத்தை இன்னும் அதிகமாய்க் கேட்பதற்கென்று வந்தவர்கள் (வ. 32) இயேசுவைப் பற்றியும் சிலுவையைப் பற்றியும் அவரது (பவுலின்) அடுத்த பிரசங்கத்தில் கேட்டார்கள் (1 கொரி. 2:2). (3) வசனம் 30ல் உள்ள "மனந் திரும்புதல்" என்ற வார்த்தையானது, நடபடிகள் புத்தகத்தில் உள்ள இது போன்ற மற்ற வசனப் பகுதிகளில் "விசுவாசம்" என்ற வார்த்தையைப் போலவே மனிதரின் செயல் முழுமை யையும் குறிப்பதாக இருக்கின்றது. நிலைத்த கருத்துடன் இருப்பதற்கு, ஞானஸ்நானமானது சில வேளைகளில்

இரட்சிப்பிற்கான நிபந்தனையாகக் குறிப்பிடப்படவில்லை என்பதால் ஞானஸ்நானம் அவசியமல்ல என்று வாதிடுபவர்கள், பவுலின் மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில் விசுவாசமானது இரட்சிப்புக்கான நிபந்தனையாகக் குறிப்பிடப்படவில்லை என்பதால் இயேசுவை இரட்சகர் என்று விசுவாசிப்பதும் தேவையில்லை என்றல்லவா வாதிட வேண்டும். பவுல் மற்றவர் களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் "வேறொரு சுவிசேஷத்தை" (கலா. 1:6) அத்தேனியர்களுக்குப் பிரசங்கித்த தில்லை என்பதை, வேத வசனத்தை நியாயமாக விவரிக் கின்றவர்கள் அறிகின்றார்கள். அவர்கள் தங்களின் கடந்த காலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப் படுவதற்கு, மற்ற எல்லாரும் செய்தது போலவே பின்வரும் பதில்செயல் செய்ய வேண்டிய தாய் இருந்தது: அவர்கள் இயேசுவை விசுவாசித்து, தங்கள் பாவங்களுக்காக மனந் திரும்பி, தங்கள் விசுவாசத்தை அறிக்கை யிட்டு மற்றும் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட வேண்டியதாய் இருந்தது (ரோமர் 6:3, 4).

## பதில்செயல் (17:32-34)

"நேர்மையான இருதயங்களைத் தேடுதல்" என்ற முந்திய பாடம் ஒன்றில், பவுல் நேர்மையான இருதயங்களைத் தேடி அத்தேனே பட்டணத்திற்கு வந்ததாக நாம் ஆலோசித் திருந்தோம். நேர்மையான இருதயங்கள் நல்ல நிலத்தைப் போன்றவை என்று இயேசு கூறினார்: அவைகள் ஆழமானவை களாக, சுத்தமானவைகளாக மற்றும் உரமிக்கவைகளாக இருக்கின்றன (லூக். 8:4-15). அத்தேனேயில் இருந்த நிலத்தில் பெரும் பகுதியானது ஆழம் அற்றதாகவும், மூட நம்பிக்கை மற்றும் மனிதரின் தர்க்கவாதங்கள் என்ற களைகள் மூடியதா கவும் மற்றும் இறந்து போனதாகவும் இருந்தது. லூக்கா, "மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்ட பொழுது சிலர் இகழ்ந்தார்கள். சிலர்: 'நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம்' என்றார்கள் ... சிலர் அவனைப் பற்றிக்கொண்டு விசுவாசிகளானார்கள்" (வ. 32, 34அ) என்று கூறினார். லூக்காவினால் பட்டியலிடப்பட்டுள்ள மூன்று வகையான பதில்செயல்கள் உலகம் முழுவதிலும்

*சுவிசேஷத்திற்குக் கிடைக்கும் பதில்செயல்களின் முன்மாதிரியான பதில்செயல்களாய் இருக்கின்றன.*

## சிலர் இகழ்ந்தார்கள்

*முதலாவது, "மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்ட பொழுது" "சிலர் இகழ்ந்தார்கள்" (வ. 32அ). நீண்ட காலத்துக்கு முன்பே, ஆழமற்ற மனம் கொண்ட தனிநபர்கள் புதிய விஷயம் ஒன்றைப் பற்றி ஆய்வு செய்வதைக் காட்டிலும் அதை இகழ்ந்து பேசுவது சுலபம் என்பதைக் கண்டு பிடித்தார்கள்; "அதைப் பற்றிச் சிரித்தால், நீங்கள் அதைக் காணாதது போல் விட்டுவிட முடியும்."*

*அந்தக் கூட்டத்தை "மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்" என்ற கருத்துதான் உடைத்துப் போட்டது (கலைத்து) என்பதைக் கவனியுங்கள். தங்களுடைய பரிசுத்தமான கலைப் பொருட்களைப் பவுல் தரம் தாழ்த்தியதை அவர்கள் பொறுமையாகக் கவனித்தார்கள் மற்றும் அவர்கள் மனந் திரும்ப வேண்டும் என்று மறைமுகமாக உணர்த்தப்பட்டதைக் கூட சகித்துக் கொண்டார்கள். இருந்தாலும், "பட்டணத்தைச் சேராத அந்த விதை பொறுக்கி" உடலின் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசியபோது அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருக்க முடியவில்லை. மாறுபட்ட தத்துவக் கருத்தைப் போதித்தவர்கள் சிறு அளவுக்கு ஒத்துப் போனார் கள், ஆனால் உடலின் உயிர்த்தெழுதல் பற்றிய கருத்தானது மதியீனமானது என்பதில் அவர்கள் எல்லாரும் சேர்ந்து கொண்டார்கள். ஆத்துமாவின் அழிவற்ற தன்மை பற்றி நம்பியவர்கள் கூட உடலானது பூமிக்குரியது மற்றும் தீமையானது என்று நினைத்தார்கள். "கிரேக்கரைப் பொறுத்தமட்டில், உடல் என்பது ஒரு சிறைச்சாலை மட்டுமேயாகும்; ஒரு நபர் எவ்வளவு சீக்கிரமாய்த் தன் உடலை விட்டுப் போகின்றாரோ, அவ்வளவுக்கு அவர் சந்தோஷமாய் இருக்க முடியும். செத்துப் போன உடல் ஒன்றை மறுபடியும் உயிர்ப்பித்து அதில் ஏன் வாழ வேண்டும்?''* (Wiersbe, 474) *கிரேக்க கல்வியாளர்களுக்கு முன்மாதிரியாய் இருக்கும் ஒருவரின் எண்ணத்தை கிரேக்க எழுத்தாளர் ஒருவருடைய பின்வரும் கூற்றானது சுருக்கி விளக்கும்: "மனிதன் இறந்து, மண்ணானது அவன் இரத்தத்தைக்*

*குடித்த பிறகு, உயிர்த்தெழுதல் என்பது இல்லை.''*[14] இந்தக் கூற்றில் "உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தைக்குப் பவுலினால் பயன்படுத்தப்பட்ட *anastasis* என்ற வார்த்தைதான் இதிலும் பயன்படுத்தப்பட்டது (17:18க்கான குறிப்புகளைக் காணவும்.)

Areopagusல் இருந்த பரியாசக்காரர்கள் தங்கள் பார்வைக்கு எட்டிய இடத்தில் ஒரு புதையலைப் பெற்றிருந்தும் கூட, அதைத் தங்கள் கைவிரல்களினூடே நழுவவிட்டு விட்டார்கள்.

## சிலர் காத்திருந்தார்கள்

மற்றவர்கள் பவுலிடம், "நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம்'' (வ. 32ஆ) என்று கூறினார்கள். பேலிக்ஸைப் போலவே அவர்கள் "இப்பொழுது நீ போகலாம், [எங்களுக்குச்] சமயமானபோது உன்னை அழைப்போம்'' என்று கூறினார்கள் (வ. 24:25). அவர்கள் உண்மையிலேயே ஆர்வத்துடன் இருந்தார்களா, அல்லது அவர்கள் அமைதியாக நழுவினார்களா? இதை நான் அறியவில்லை, ஆனால் தள்ளிப் போடுதல் என்பது தேவனுடன் மிக அபாயமான ஒரு விளையாட்டை விளையாடுதல் போன்றது என்பது எனக்குத் தெரியும் (24:25க்கான குறிப்புகளை அடுத்த இதழில் காணவும்).

## சிலர் விசுவாசித்தார்கள்

அந்த வேளையில், "பவுல் அவர்களை விட்டுப் போய் விட்டான்" (வ. 33). பவுல் தாம் சொல்லியிருந்தவைகளைப் பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்க்கும்படி அவர்களை விட்டு, மலையோரமாய் இருந்த படிகளில் இறங்கிச் சென்று விட்டார். ஒருவேளை அவர் ஊக்கம் குறைந்தவராகச் சென்றிருக்கலாம். அப்படியிருந்திருந்தால், அடுத்த வசனத்திற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்: "சிலர் அவனைப் பற்றிக் கொண்டு, விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ் மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள்'' (வ. 34). அது ஒன்றும் பெரிய அளவிலான அறுவடையாயிருக்கவில்லை, ஆனாலும் அது ஒரு அறுவடைதான்-அகில உலகம் முழுவதையும் காட்டிலும் ஆத்துமா ஒன்று அதிகம் விலையேறப் பெற்றதாகும்.

மனம் மாறியவர்களில், ''மார்ஸ் மேடை நியாயாதிபதிகளில்'' ஒருவராகிய தியொனீசியு[15] என்பவரும் இருந்தார். மார்ஸ் மேடை நியாயாதிபதிகள் என்பவர்கள் புகழ்பெற்ற மார்ஸ் மேடை நீதிமன்றத்தின் உறுப்பினர்களாய் இருந்தார்கள். தியொனீசியு என்பவர் அந்நகரின் உயர்மதிப்புள்ள சிறு குழுவில் ஒருவராய் இருந்தார். அத்துடன், தாமரி என்ற பெயருள்ள ஒரு பெண்மணியும் இருந்தார்கள். லூக்கா இப்பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டுள்ளபடியால், இப்பெண் ஒருவேளை செல்வாக்குள்ளவளாய் இருந்திருக்கலாம்-அப்படி இல்லாமலும் இருக்கலாம். பிறகு அங்கு "மற்றவர்களும்" இருந்தார்கள். பவுலின் பிரசங்கத்தைச் சுருக்க வடிவில் கொடுத்தது போலவே லூக்கா அத்தேனே பட்டணத்தில் பவுலின் ஊழியம் மற்றும் அந்த ஊழியத்திற்குப் பதில்செயல்கள் ஆகியவை பற்றியும் சுருக்கமான ஒரு வசனத்தையே கொடுக்கின்றார்.

அத்தேனே பட்டணத்தில் ஒருவர்கூட ஞானஸ்நானம் பெறவில்லை என்று விளக்கவுரையாளர்கள் பலர் வலியுறுத்துகின்றார்கள். இதை அவர்கள், கொரிந்துவில் வாழ்ந்த ஸ்தேவானுடைய வீட்டாரே (1 கொரி. 1:14-16; 16:15) "அகாயா நாட்டிலே முதற் பலனானவர்கள்'' (1 கொரி. 16:15) என்ற பவுலின் கூற்றினுடைய அடிப்படையிலேயே சொல்லுகின்றார்கள் (அத்தேனே மற்றும் கொரிந்து ஆகிய பட்டணங்கள் அகாயா மாநிலத்தில்தான் இருந்தன). ஆயினும், பவுல் அத்தேனே பட்டணத்தில் தங்கியிருக்கையில் ஸ்தேவானும் அவருடைய குடும்பத்தாரும் அங்கு வந்திருந்து, அவ்வேளையில் பவுலினால் அங்கேயே ஞானஸ்நானம் பெற்றிருக்க வாய்ப்புண்டு. சிலர் பவுலைப் "பற்றிக் கொண்டு" "விசுவாசிகள் ஆனார்கள்'' என்பது மற்ற நகரங்களிலும் மனமாற்றத்தைக் குறிப்பிட லூக்கா பயன்படுத்திய சுருக்கக் குறிப்பின் எடுத்துக்காட்டு ஆகும் (13:48; 14:1; 17:4; 17:12); அவர் 17:34ல் மாறுபட்ட எதையும் அர்த்தப்படுத்தினார் என்று முடிவு செய்வதற்குக் காரணம் எதுவும் இல்லை. "ஞானிகள் அநேகர்" கிறிஸ்தவர்களானதில்லை (1 கொரி. 1:26) என்று பவுல் எழுதியது உண்மையே, ஆனால் "அநேகர் இல்லை" என்பது "எவரும் இல்லை" என்று அர்த்தப்படாது.

*சில விதிவிலக்குகளுடன், விளக்கவுரையாளர்கள், அத்தேனே நகரில் பிராந்திய சபை எதையும் பவுல் நிலைநாட்ட வில்லை என்று உறுதியாய்க் கூறுகின்றார்கள் - அந்நகரில் ஒரு சபை இருந்ததாகப் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை என்ற உண்மையின் அடிப்படை ஆதாரத்திலேயே இவ்வுறுதிப் பாடு அமைகின்றது. இருப்பினும், புதிய ஏற்பாட்டில் குறிப் பிடப்படாத பல பிராந்திய சபைகளைப் பவுல் நிலை நாட்டியிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு பிராந்திய சபையை அமைக்கத் தேவைப்படுவதென்ன என்பதில் பல விளக்கவுரையாளர்கள் நாமகரணக் கூட்டத்தின் கருத்தையே எடுத்துக் கொள்கின்றார்கள். சுவிசேஷத்திற்கு ஒருவர் கீழ்ப்படியும்போது, தேவன் அந்தத் தனிநபரை சபையில் சேர்க்கின்றார் (அப். 2:4 7க்கான குறிப்புகளைக் காணவும்) என்று வேதாகமம் போதிக்கின்றது. அத்தேனேயில், குறைந்தது ஆறு பேர்[16] மனமாற்றம் பெற்றதாக லூக்கா கூறினார். "அமைவு பெற்றோ" அல்லது "அமைவு பெறாமலோ" அந்த உறுப்பினர் கள் அந்தப் பட்டணத்தின் சபையை அமைத்தார்கள். (இரண்டாம் நூற்றாண்டில் அத்தேனே நகரில் உறுதியான ஒரு பிராந்திய சபை இருந்ததாக வரலாறு பதிவு செய்திருக்கின்றது. அந்த அறுவடைக்கான ஆரம்ப விதைகளைப் பவுல் விதைத்திருந்தார் என்பதை யாரேனும் மறுக்க முடியுமா?)*

*அத்தேனே நகரில் இருந்த அத்தனை சிறிய எண்ணிக்கையில் ஆன நேர்மையான இருதயங்களுக்கு என்ன ஆயிற்று என்று அறிந்து கொள்ள நாம் விரும்புகின்றோம். ஆனால் லூக்கா அதை நமக்குக் கூறவில்லை. விரைவிலேயே பவுல் மேற்கு நோக்கிப் பயணம் செய்து, அத்திசையில் இருந்த நிலம் சிறந்ததா என்று காணத் தொடங்கினார். கொரிந்துவில் நாம் மறுபடியும் இவ்வரலாற்றைத் தொடருவோம்.*

## முடிவுரை

*அறியப்படாத தேவன் அறியப்படுத்தப்பட்டதால் அகம் மகிழுங்கள்! "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (வ. 28). இப்பொழுது நாம் நமது சுயநலமுள்ள வாழ்வை விட்டுவிட்டு அவரை நோக்கித் திரும்ப வேண்டியது*

*அவசியமாகும். "இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் [தேவன்] கட்டளை யிடுகிறார்" (வ. 30). நீங்கள் மனந்திரும்புவது அவசியம் என்று நீங்கள் நினைப்பதில்லையா? அப்படியென்றால் இந்தப் பாடம் உங்களுக்கு உரியதாகவே இருக்கின்றது!*

*நீங்கள் எவ்விதத்தில் பதில்செயல் செய்வீர்கள்? சிலர் செய்தது போல நீங்களும் இகழுவீர்களா? மற்றவர்கள் செய்தது போல நீங்களும் முடிவைத் தள்ளிப் போடுவீர்களா? அல்லது ஒரு சிலர் செய்தது போல நீங்களும் விசுவாசித்துக் கீழ்ப்படி வீர்களா? இதை நினைவில் வையுங்கள்: இயேசு இப்பொழுது உங்கள் இரட்சகராய் இருக்க முடியும், பின்னாளிலோ அவர் உங்கள் நியாயாதிபதியாய் இருப்பார். தேவன், "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் ... பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்'' (வ. 31). உயிர்த்தெழுதலானது இதை உறுதிப்படுத்துகின்றது!*

## பிரசங்கக் குறிப்புகள்

*பவுலின் பிரசங்கத்திற்கு நீங்கள், "மனிதரின் குழப்பமான கேள்விகளுக்குப் பரலோகத்தின் தெளிவான பதில்கள்" என்று தலைப்பிட்டு அதைப் பத்தி வரிசை முறைப்படி பின்வரும் கேள்விகளைக் கேட்டுப் பிரிக்கலாம்: (1) "நான் எங்கிருந்து வந்தேன்?" (தேவன் என்னை உண்டாக்கினார்) (வ. 24-26), (2) "நான் ஏன் இங்கு இருக்கின்றேன்?" (தேவனைத் தேடு வதற்கு) (வ. 27-29), (3) ''நான் எங்கு போகின்றேன்?'' (நியாயத்தீர்ப்புக்கு). இந்தச் சிந்தனைகள் (1) மனிதரின் தோற்றம், (2) மனிதரின் நோக்கம், மற்றும் (3) மனிதரின் அடைவிடம் என்றும் பெயரிடப்படலாம்.*

*பவுலின் பிரசங்கத்தை வார்ரென் W. வயர்ஸ்ப் அவர்கள் பின்வருமாறு புறக்குறிப்பிட்டார்: (1) தேவனுடைய மாபெரும் தன்மை (அவர் படைத்தவர்) (வ. 24). (2) தேவனுடைய நல்ல தன்மை (அவர் கொடுப்பவர்) (வ. 25). (3) தேவனுடைய அரசாங்கம் (அவர் ஆளுகை செய்பவர்) (வ. 26-29). (4) தேவனு டைய கிருபை (அவர் மீட்பர்) (வ. 30, 31).*

# ஏவப்படாத ஆதாரங்களில் இருந்து மேற்கோள் காட்டுதல்

*மார்ஸ் மேடையில் பவுலின் பிரசங்கமானது அநேகமாக அவரது உயர்தரமான கல்வியைப் பிரதிபலிக்கின்றது; தமது உரையைக் கேட்டவர்களால் உயர் மரியாதை செய்யப்பட்டிருந்த உலகக் கவிஞர்களின் எழுத்துக்களில் இருந்து அவர் மேற்கோள் காட்ட முடிந்தது. ஏவப்படாத எழுத்தாளர்களின் எழுத்துக்களில் இருந்து இவ்விதமாய்ப் பவுல் மேற்கோள் காட்டியது இன்னும் இரு வேளைகளில், 1 கொரி. 15:33 மற்றும் தீத்து 1:12 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றது. இந்த எடுத்துக்காட்டுகளில் இருந்து நாம் இரண்டு முடிவுகளைப் பெறுகின்றோம்: (1) விளக்கப்படுத்தவோ அல்லது தெளிவு படுத்தவோ, ஏவப்படாத ஆதாரங்களில் இருந்து மேற்கோள் காட்டுவது பிரசங்கியார் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தேயாகும். (2) மிகச் சில எடுத்துக்காட்டுகளே இவ்வகையில் காணப்படுவதால், இது தாராளமாய்ச் செய்யப்படக் கூடாதென்று நாம் முடிவு செய்கின்றோம். வேத வகுப்புப் பாடம் அல்லது பிரசங்கம் என்பது புத்தகங்கள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள் மற்றும் பல உலக ஆதாரங்கள் ஆகியவற்றின் மேற்கோள்கள் நிறைந்த ஒரு "மசாலா" ஆகி விடக் கூடாது. "திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு" (2 தீமோ. 4:2) என்றே தேவனுடைய திருக்கட்டளை நினைவூட்டுகின்றது. இன்றும் சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவபெலனா யிருக்கிறது (ரோமர் 1:16).*

குறிப்புகள்

*[1]பவுல் ஒரு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தால், நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தனக்குச் சாதகமாய்ப் பெற்றுக் கொள்வதற்காக அந்த நீதிமன்றத்தைப் புகழ்வது என்பது சட்ட விரோதமான செயல் ஆகும். [2]இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பவுஸானியஸ் மற்றும் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பிலாஸ்த்ரோத்துஸ் என்ற உலக நடை எழுத்தாளர்கள் இருவர் இந்த வழக்கத்திற்குச் சாட்சி*

*கொடுத்துள்ளார்கள்.* [3]*"அறியாமல் இருக்கும் ஒருவர்" என்ற நேரடி அர்த்தம் தரும்* "agnostic" *என்ற வார்த்தையை நாம் இந்த வார்த்தையில் இருந்துதான் பெறுகின்றோம். நாத்திகர் ஒருவர், "தேவன் இல்லை" என்று கூறுவார்;* agnostic *(அறியாதவர்) ஒருவரோ, "தேவன் ஒருவர் இருக்கிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது" என்று கூறுவார்.* [4]*பவுலின் வார்த்தைகள் நமக்கு, சாலமோன் (1 இரா. 8:27) மற்றும் ஸ்தேவான் (அப். 7:48, 49) ஆகியோரின் வார்த்தைகளை நினைவூட்டுகின்றன.* [5]*வசனம் 17:26க்கு இனச்சார்பான அதிகக் குரல் கொடுக்கப் பலர் முயற்சி செய்திருக்கின்றார்கள்; இவ்வசனம், "தேவன் ஒவ்வொரு மனிதரையும் அவரவர் இடத்தில் வைத்துள்ளார்; அவ்விடத்தை விட்டு எவரும் வேறிடம் செல்லாமல் அங்கேயே தங்கியிருக்க வேண்டும்" என்று அர்த்தப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். இருந்தாலும், இதைக் கூறியவர் ஒரு யூதர் என்பதையும், அவர் ஆசியாவில் வளர்ந்து, எருசலேமில் கல்வி கற்று, ஐரோப்பாவில் பிரசங்கித்தார் என்பதைக் கவனியுங்கள். கல்வி மற்றும் சமூக நிலை ஆகியவற்றில் எல்லாத் தரப்பினரிடமும் அவர் இணைந்து பழகினார். அவர், தெய்வீகத்தினால் முன் குறிக்கப்பட்டிருந்தது" என்று கூறப்படும் சமூக அல்லது புவியியல் சார்ந்த "இடத்தில்" "தங்கியிருக்க" வில்லை.* [6]*ஒருவர் எங்கு வாழ்ந்தாலும், நாட்டின் விஷயங்களில் தேவன் செயல்படுகின்ற கருத்தைக் கூற முடியும்.* [7]*மனிதன் இவ்வுலகத்தில் இருப்பதற்கான நோக்கத்தின் மாபெரும் மற்றொரு கூற்றை மத்தேயு 5:16ல் காணவும். "தேவனைத் தேடுதல்" என்பது மனிதரின் தொடக்க நிலை நோக்கமாக எண்ணப்படலாம்; "தேவனை மகிமைப்படுத்துவதே" மனிதரின் முற்றான நோக்கம் ஆகும்.* [8]*பவுலைப் போலவே அராத்துஸ் என்பவரும் சிலிசியா நாட்டைச் சேர்ந்தவரே. பவுல் தர்சுப் பட்டணத்தில் தமது இளநிலைக் கல்வியைக் கற்றபோது அராத்துஸ்ஸின் வார்த்தைகள் அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்டதை கேட்டிருந்திருக்கலாம்.* [9]*கிளீன்தெஸ் என்ற இன்னொரு கவிஞர் இதே கருத்தைச் சற்று மாறுபட்ட வார்த்தைகளில் விளக்கப் படுத்தினார்.* [10]*தெய்வீகத்தின் தனிப்பட்ட பண்புகளைக் குறிக்கும் theion என்ற வார்த்தையை மொழிபெயர்க்க இவ்விடத்தில்* Godhead *என்ற வார்த்தை* KJV*யில் பயன்படுகின்றது. பழைய ஆங்கில வார்த்தையான* Godhead *என்பது* Godhood *என்று நினைக்கப்பட்டிருக்கலாம்.* Manhood" *என்பது மனிதரை மனிதராக்கும் பண்புகளைக் குறிப்பிடுவது போல, தேவனை தேவனாக்கும் பண்புகள்* Godhood *என்று குறிப்பிடப்பட்டிருக்கலாம்.* Divine Nature *என்று* NASB*யில் பயன்பட்டிருக்கும் சொற்றொடரானது இக்கருத்தை விளக்கப்படுத்துகின்ற ஒரு வழியாகும்.*

[11]*"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் சொற்பொருள் அகராதியில்* Repent" - *"மனந்திரும்புதல்" என்ற வார்த்தையின் கீழ் காணவும்.* [12]*அந்த நாள் எப்பொழுது என்பதைத் தேவனைத் தவிர ஒருவரும் அறிவதில்லை (மத். 24:36).* [13]Areopagu*வில் இருந்தவர்கள் பவுலை நியாயம் தீர்த்தபடியே அவர்களும் ஒரு நாளில் தேவன் என்ற நியாயாதிபதியால் நியாயம் தீர்க்கப்படுவார்கள் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பியதால் அப்படிப் பேசினாரா? அவர்கள் சுய திருப்தியைப் பற்றி நன்கு அறிந்திருந்ததால் மனந்திரும்புதலைப் பற்றி பவுல் பேசினாரா?* [14]*இக்கூற்றானது* Aeschylus *அவர்களின்* Eumenides *என்ற நூலில் பாதுகாக்கப்*

பட்டுள்ளது, மற்றும் இக்கூற்று Richard Oster அவர்களால் *The Acts of the Apostles Part II* (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 77ல் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது. [15]பாரம்பரியத்தின்படி, அத்தேனேயில் கூடி வந்த சபையில் தியோனீசியு ஒரு மூப்பரானார் எனப்படுகிறது. இப்படி நடந்திருக்கலாம். மற்ற பாரம்பரிய விஷயங்கள் நடந்திருக்க வாய்ப்பில்லை. இன்று அத்தேனேயில் அவன் பெயரில் ஒரு தெரு பெயரிடப்பட்டிருக்கின்றது. [16]வசனப்பகுதியானது “சிலர் [குறைந்தது இரண்டு பேர்] … அவர்களில் … தியொனீசியு என்பவனும் … [+1] தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும் [+1] … இவர்களோடே வேறு சிலரும் [+ குறைந்தது இன்னும் 2 பேர்] இருந்தார்கள்” என்று கூறுகின்றது.